Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# Women in Folk Literature

**Dr. D. R. Udhayakumari,** Assistant Professor, Sree Ayyappa College for Women, Chunkankadai, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-9694-7076
**DOI: 10.5281/zenodo.14744586**

## Abstract

*Folk literature expresses the experience of rural human life. Folk literature expresses the lifestyle and beliefs of the society. Folk tradition is a way in which the folk people express their inner thoughts in the form of stories, songs and dances. This sort of literature took shape as oral literature in ancient times and later took on a written form. The uniqueness of this literature is that it expresses the individual life experiences of the folk people and the social disorders through the medium of art. People easily express their ideas from their minds through folk art forms. The people who initiated this type of literature could be the folk women. They developed this art by singing their inner feelings as songs. The position of women in society includes the rights of women and the relationship between society and women. While talking about the status of women, it covers various aspects like their education, economic status, social status and family. If society wants to rise, the status of women must rise. Women have more responsibility than men to raise good children and bring them up to be useful for the wellbeing of the society. Therefore, the upliftment of a society can be a major pillar for the development of the society in the hands of women. This article explains how women are shown in Tamil folk literature.*

**Keywords:** Women, Folk Literature, Tamil Culture.

## References

[1] Shanmugasundaram, S. *Nattupura Ilakkiya Varalaru*. Manivasakar Publishing House, 1980.
[2] Sathyaseelan, C. *Nattupura Ilakkiya Ayivugal*. Pioneer Book Service, 47, Nallathambi Street, Tiruvallikeni.
[3] Ramasamy, P. *Kudumba Pazhamozhigal*. Notion Press, Chennai, 2022.
[4] Varadarajan, *Tamizhaga Nattupadalgal.* Vanathi Publishing House, Chennai-17, 1978.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# நாட்டுப்புற இலக்கியத்தில் பெண்கள்

**முனைவர் த. ரா. உதயகுமாரி**, உதவிப்பேராசிரியர், ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி,
சுங்கான்கடை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-9694-7076
DOI: 10.5281/zenodo.14744586

**ஆய்வுச் சுருக்கம்**

*சமூகத்தில் பெண்களின் நிலை என்பது பெண்களின் உரிமைகள், மற்றும் சமூகத்திற்கும் பெண்களுக்கும் இடையிலான தொடர்பை உள்ளடக்கியது. பெண்களின் நிலையைப் பற்றி பேசும் போது அவர்களின் கல்வி, பொருளாதார நிலை சமூக மற்றும் குடும்ப அதிகாரம் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. சமூகம் உயர வேண்டும் என்றால் பெண்களின் நிலை உயர வேண்டும். நல்ல பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து அவர்களை சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக வளர்க்கும் பொறுப்பு ஆண்களைவிட பெண்களக்கே அதிகம். அதனால் ஒரு சமூகத்தின் உயர்ச்சி பெண்களின் கைகளிலேயே எனலாம். சமூகத்தின் வளர்ச்சிக்கு பெருந்தூணாக விளங்கும், பெண்களைச் சமூகம் எப்படி காண்கிறது என்றும், நாட்டுப்புற பெண்களின் நிலைகளை விளக்கிக் கூறுகிறது இக்கட்டுரை.*

**குறிப்புச்சொற்கள்:** பெண்கள், நாட்டுப்புற இலக்கியம், தமிழ்ப் பண்பாடு.

**முன்னுரை**

மனித வாழ்வின் அனுபவத்தை நாட்டுப்புற இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. சமூகத்தின் வாழ்வியல் முறை, நம்பிக்கை ஆகியவற்றை நாட்டுப்புற இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. நாட்டுப்புற மக்கள் தங்கள் உள்ளக் கருத்துக்களைக் கதையாகவோ பாடல்களாகவோ, நடனமாகவோ வெளிப்படுத்துவதே நாட்டுப்புற இலக்கியமாகும். இவ்விலக்கியம் ஆதிகாலத்தில் வாய்மொழி இலக்கியமாக உருபெற்று பின்னர் எழுத்து வடிவம் பெற்றது. நாட்டுப்புற மக்களின் தனி மனித வாழ்க்கை அனுபவங்களையும், சமுதாயச் சீர்கேடுகளையும் கலைகளின் வாயிலாக வெளிப்படுத்துவதே இவ்விலக்கியத்தின் தனித்துவமாகும். மக்கள் தங்கள் மனதில் உள்ள கருத்துக்களை எளிதில் வெளிப்படுத்தினர். இவ்விலக்கியத்தின் உருவாக்கத்திற்கு வித்திட்டவர்கள் நாட்டுப்புற பெண்களே எனலாம். உள்ளத்திலுள்ள உணர்ச்சிகளைப் பாடல்களாகப் பாடி இக்கலையை வளர்த்து வருகின்றனர். நாட்டுப்புற இலக்கியத்தை வளர்த்த பெருமை பெண்களையும் சாரும் எனலாம். ஆதிகாலத்தில் தாலாட்டுப் பாடலாக உருபெற்று பின்னர் நெல்லுகுத்துப் பாடல், நடவுநடும் பாடல், மரணம் நடந்த வீட்டில் பாடப்படும் ஒப்பாறிப்பாடல் என பல வடிவங்களாக உருபெற்று கதை, நடனம், நாடகம் என்ற வடிவத்தையும் அடைந்து சிறப்பு பெற்று விளங்கி வருகின்றன. மனித

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அமைந்த இவ்வகை இலக்கியத்தின் வாயிலாக சமுதாயத்தில் பெண்களின் நிலையைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திருமணவாழ்வு**

நாட்டுப்புற பாடல்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய பாடல்கள் ஆகும். இவை பெண்களின் வாழ்வியல் நிகழ்வுகளைப் பற்றியும், அவர்களின் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. நாட்டுப்புற இலக்கியம் பெண்களின் சமுதாயக்கட்டுப்பாடு, உரிமை இன்மை, குடும்பத்தின் தன்மானம் காக்கும் நியதி, போன்றவை வெளிப்படுத்தப்படுகின்றன. நம் சமுதாயத்தில் பழங்காலம் முதல் இன்று வரை பெண்களைப் போகப் பொருளாகவே எண்ணுகின்றனர். சமுதாயக் கட்டுப்பாடுகள் ஆண்களைவிட பெண்களிடமே அதிகம் சுமத்தப்பட்டு வருகிறது. பெண்கள் ஆண்களுக்கு அடங்கி நடப்பவர்களாகவும், சமூக நம்பிக்கைகளுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் சுதந்திரம் அற்றவர்களாகவும், பேச்சுரிமை தடை செய்யப்பட்டவர்களாகவும், வாழ்ந்து வருகின்றனர். தங்களுக்கு இழைத்த கொடுமைகளை உள்ளக் குமுறலை மறைமுகமாகப் பாடல்கள் மூலமாகவும், பழமொழிகள் மூலமாகவும் கிராமப்புற பெண்கள் வெளிப்படுத்தினர்.

திருமணத்திற்குப் பிறகு கணவனைச் சார்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்ணின் கணவன் அப்பெண்ணை விட்டு வேறு பெண்ணிடம் தொடர்பு கொள்கின்றான். இதைப்பற்றி அவனிடம் நேரடியாகக் கேட்க முடியாது. ஏனென்றால் "ஆம்பளை ஆயிரம் செய்வான் பொம்பள நீ தான் அனுசரித்துச் செல்ல வேண்டும்" என்ற சமுதாய முதுமொழி வாய் அடைத்து விடும். இதனால் அப்பெண் தன் உள்ளக் குமுறல்களை நடவு நடச் செல்லும் இடத்தில் கீழ்க்கண்டவாறு வெளிப்படுத்துகிறாள்.

**காலையில் பூத்த பூவு ஏலேலம்ப ஏலம்**
**கனகமல்லி நானிருக்க ஏலேலம்பா ஏலம்.**
**காஞ்சிப் போன பூவுக் குத்தா ஏலேலம்ப ஏலம்**
**சடசடயா சுத்துறாண்டி ஏலேலம்ப ஏலம் (நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள்)**

இப்பாடலில் பெண் உரிமை அற்றவளாக தன் வாழ்வில் ஏற்படும் அநியாயத்தைத் தட்டிக்கேட்க இயலாதவளாகவும், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் கண்டும் அதற்கு எதிரே குரல் கொடுக்க இயலாதவளாகவும் தனக்கு இழைத்த அநீதிகளைப் புலம்பலாக பாடித் தீர்க்கின்றாள். இன்றும் இந்நிலை நாட்டுப்புற பெண்களின் வாழ்க்கையில் காணப்பட்டு வருகின்றது.

**கூடினமே கூடினமே**
**கூட்டுவண்டிக் காளைப்போல**
**விட்டுப் பிரிஞ்சமையா**
**ஒத்த வண்டிக் காளைப்போல (நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள்)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

இப்பாடலும் கணவனைப் பிரிந்த பெண்ணின் புலம்பலாகும். கணவனிடம் குற்றங்கள் காணப்பட்ட போதும் கணவனை மறக்கமுடியாமல் அவனையே எண்ணி வருந்துகின்றாள். இந்நிலை காலம்காலமாக நம் சமூகத்தில் காணப்பட்டு வருகின்றது. இது கிராமப்புற பெண்களின் மரபு வழி நம்பிக்கையின் வெளிப்பாடாகவும், திருமணமான பெண் கணவனே கண்கண்ட தெய்வம் என வாழ வேண்டும் என்று நம் முன்னோர்கள் கூறிய வாழ்வியல் முறையை கடைப்பிடிக்க கட்டாயப்படுத்தப்-படுகிறாள். அவள் சார்ந்த முடிவை எடுக்க அவளுக்கு உரிமை மறுக்கப்படுகிறது. கணவன் எடுக்கும் முடிவே தன் முடிவு என வாழ சமூகம் கட்டாயப்படுத்துகிறது. சமூகத்தில் பெண் தனக்கென்று ஒரு தனித்துவமில்லாமல் எப்போதும் ஆணையே சார்ந்து வாழும் நிலையில் வளர்த்தப்படுகிறாள். இதன் விளைவே இப்பாடலின் வெள்ப்பாடு எனலாம். நகரத்தில் வாழும் பெண்களைவிட கிராமத்தில் வாழும் பெண்களிடமே இந்நிலை அதிகமாகக் காணப்படுகிறது. ஆணைச் சார்ந்து வாழ வேண்டிய அவலநிலையை இச்சமூகம் உருவாக்கியுள்ளது. நாட்டுப்புற பெண்கள் தங்கள் கருத்தைக் குறியீடாகப் பயன்படுத்தியுள்ளனர்.

**காதல் வாழ்வு**

காதல் வாழ்க்கையில் கூட பெண்கள் தங்களின் நிலையை நன்கு உணர்ந்திருந்தனர். திருமணத்திற்கு முன் பெண்கள் சமுதாயத்திற்குக் கட்டுபட்டு வாழ்ந்தனர். மாமன் மகனைக் கண்டு உறவாடிய பெண்ணிடம் மாமன் மகன்,

**தண்ணீக்கு போகும் மாமன் மகனே**
**உன் இரண்டு மண் குடத்தின் விலை**
**என்ன? என்று கேட்டதாகவும் அதற்கு**
**அப்பெண் மண் குடம் போனால்**
**மறுகுடம் வாங்கலாம்**
**மானம் போனால் - மாமன் மகனே**
**உலகம் என்ன சொல்லும்? (நாட்டுப்புற பாடல்)**

என்ற பதில் கூறும் பாடலினால் மானம், கற்பு என்பது பெண்ணிற்கு மட்டுமே அதிகம் பேசப்பட்டு வந்துள்ளது என்பதை உணரலாம். தவறு செய்வது ஆண் பெண் இருவரும் என்றாலும் ஆணை விட பெண்ணையே சமூகம் தூற்றும் என்பதை குறிப்பாக இப்பாடல் உணர்த்துகிறது. இந்நிலை எக்கால பெண்களும் அனுபவித்து வரும் நிலையாகும். கிராமப்புறங்களில் வாழும் பெண்ணிற்கே இந்நிலையின் தாக்கம் அதிகம் காதலில் கூட பெண்ணிற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட சமூக நிலை கூறப்படுகிறது.

**குடும்ப நிலை**

திருமணம் நடந்து வருடங்கள் சென்ற பிறகும் குழந்தை இல்லாக் காரணத்தால் அவளை ஒதுக்கிவிட்டு மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு வந்து இன்பமாக

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

வாழ்க்கையை நடத்தும் தனது கணவனின் செயலைக் கண்டு வருந்திய பெண்ணின் உள்ளக் குமுறல்.

**சுத்தி சவுக்கைகளாம் - ஏ மாமா அங்க**
**சுருளு வச்ச திண்ணகளா ஏ... சாமி**
**அங்க சுருண்டு படுக்கலான்னா - ஏ மாமா அவள்**
**சொந்தமில்ல இன்னிட்டாளே ஏ சாமி அவள்**
**சொந்தமில்ல இன்னிட்டாளே (நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள்)**

குழந்தைப்பேறு அற்ற பெண் கணவனால் ஒதுக்கி வைக்கப்படுகின்றாள் என்றும், வீட்டிற்குள் தங்குவதற்கு கூட இடம் கொடுக்காமல் வெளியேற்றப்படுகிறாள் என்றும், இப்பாடலில் கூறப்படுகிறது. குழந்தைப்பேறு என்பது இறைவனால் நிச்சியிக்கப்படுகின்ற செயல். ஒரு பாவமும் அறியாத பெண்களை மட்டும் குற்றப்படுத்தி வீட்டிலிருந்து ஒதுக்கப்படுவது எந்த விதத்தில் ஞாயம்? குழந்தையின்மைக்குக் காரணம் கணவன் மனைவி இருவருமே என்ற போழ்திலும் ஆணுக்கு மறுமணமும் பெண்ணிற்கு வீட்டிலிருந்து விலக்கும் தரப்படுவது சரியா? பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை வெளிப்படுத்தும் மற்றொரு பாடல்.

**... மாடும் கன்றுந் தீண்டலியே**
**கன்று போகும் வடதிதனில**
**கத்த போர போட்டு வச்ச**
**கண்ணகியா பேர சொன்ன**
**கன்னும் மாடும் தீண்டலியே**
**காயா வரடி ஐயா**
**கல்லிதுன்ன நீ லி ஐயா**
**பூவா வரடி ஐயா**
**புள்ள துள்ள நீலி ஐயா**
**என்னாயா ஏ.... கணவா**
**ஏ... மனதும் துனனறது (நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள்)**

**குடும்ப பொறுப்பு**

குடும்பத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு பெண்ணுக்கே உரியது என்பதை,

**ஏர் பிடித்தவன் என்ன செய்வான்**
**பானை பிடித்தவள் பாக்கியம் (நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள்)**

கணவனின் வருமானத்திற்கு ஏற்றார் போல மனைவி சிக்கனமாகச் செலவு செய்து குடும்பத்தை வழி நடத்த வேண்டும் என்பதே இதன் பொருள் இங்கு ஆணைவிட குடும்ப சுமையும், குடும்ப பொறுப்பும் பெண்ணின் தலையில் சுமத்தப்படுகிறது. இங்கு ஆண், குடும்பம், சமுதாயம் போன்றவற்றிற்குக் கட்டுப்பட்டவளாகப் பெண் சித்தரிக்கப்படுகிறாள்.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**

**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள்.51)**

என்ற குறளின் மூலம் கணவனின் வருவாயை உணர்ந்து அதற்கு ஏற்றார் போல் செலவு செய்து குடும்பத்தைப் போற்றச் செய்பவளே சிறந்த மனைவி என்கிறார். இதனால் சமூகத்தில் பெண்கள் பொறுப்புடன செயல்பட்டு குடும்பத்தை நன்முறையில் நடத்திச் சென்றிருந்தனர் என்பதை உணரலாம். திருமணத்திற்குப் பின் பெண்கள் சிச்கனமாக வாழப் பழகிக் கொள்கின்றனர். நிலைமைக்கு ஏற்றார் போல் தங்களை மாற்றிக் கொண்டு வாழும் பண்பை பெண்கள் பெற்றிருந்தனர். ஆண்களைவிட சேமிக்கும் பண்பும் பெண்களிடமே அதிகம் காணப்பட்டு வந்தன எனலாம்.

**நாட்டுநலம்**

மழை பெய்யாத காலங்களில் பெண்களெல்லாம் கூடி வருண பகவானை வேண்டி கஞ்சி எடுத்து சடங்கு செய்யும் முறையை,

**நல்ல மழை பேயுமாலம்மா**

**நாடு செழிக்கப் பேயுமாலோ**

**செல்ல மழை பேயுமாலம்மா**

**சீமை செழிக்கப் பேயுமாலோ (நாட்டுப்புற இலக்கிய வரலாறு)**

என்று பாடுகின்றனர். பெண்களின் இறைபக்தியுடன் நாட்டுப்பற்றும் வெளிப்படுத்துகிறது. மழைபெய்தால் நாடு சிறக்கும், குடும்பம் நலம் பெறும் என்ற பொதுநலப்பண்பு வெளியாகிறது. தமிழர்களின் பண்பாட்டினையும் சடங்குகளையும் காப்பதில் ஆண்களைவிட பெண்களே முக்கிய பங்கு வகித்தனர். குறி சொல்லக் கூடியவர்கள் விளக்கை ஏற்றி வைத்து சடங்கு செய்து,

**எல்லைக் குடையவளெ - அம்மா அரகரா**

**எழுந்திரம்மா ஏகவல்லி - தாயே- ஓம் அரகரா (நாட்டுப்புற இலக்கிய வரலாறு)**

என்று பாடுகின்றனர். அந்தி நேரத்தில் விளக்கேற்றி வணங்குவது ஒரு சடங்காகும் விளக்கேற்றும் போது பெண்கள்,

**அந்தி திருவிளக்கே அலங்கார நாயகியே**

**வந்தித்து நின்றேன் நான் வாடியம்மா ஸ்ரீதேவி (நாட்டுப்புற இலக்கிய வரலாறு)**

பாரம்பரியத்தை காப்பதில் பெண்கள் தலைசிறந்தவர்களாக விளங்கினர் என்பதை உணரலாம்.

**பெண் தெய்வ வழிபாடு**

நாட்டுப்புற மக்களால் வழிபடும் தெய்வங்களை நாட்டுப்புற தெய்வங்கள் என்பர். நாட்டுப்புற தெய்வங்கள் மக்களுக்குள் மக்களாக வாழ்ந்து ஊர் நன்மைக்காகவோ அல்லது சிலரால் கொலை செய்யப்பட்டோ அல்லது பிறரால் கொடுமை செய்யப்பட்டு உயிர் துறந்தவர்களாகும். நாட்டுப்புற தெய்வங்களில் பெண் தெய்வங்களே அதிகம். இதனால்

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

சமுதாயத்தில் பெண்களே அதிகம் துன்பம் அனுபவித்து உயிர் துறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பெண்களின் நேர்மை**

நாட்டுப்புற பெண்கள் நேர்மை உடையவர்களாக வாழ்ந்தனர் என்பதை, தான் பயிர் செய்த பயிரை விற்க சென்ற பெண், சந்தையில் அவள் கூறிய விலையைவிட அதிகமாக பணம் தருவதாக ஒருவன் கூறிய போது அப்பயிரை அச்சந்தையில் விற்காமல் மற்றொரு சந்தையில் சென்று விற்றதாக தன் பாடலில் பாடுகிறாள்.

**கூடலூறு ஏத்திம்போன - ஏலேலம்பா ஏ...லம்**

**கூடலூறு தரவுகார - ஏலேலம்பா ஏ...லம்**

**கூடலூறு தரவுகார - ஏலேலம்பா ஏ...லம்**

**கூடவே வெலயுஞ் சொன்னா - ஏலேலம்பா ஏ...லம்**

**தாங்களது என்று சொல்லி - ஏலேலம்பா ஏ...லம் (நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள், ப. 38)**

பெண்களின் நேர்மைப் பண்புடன் பேராசை அற்ற அறவாழ்க்கை வாழ்பவள் தான் கிராமப்புற பெண் என்பது விளங்கும். கள்ளம் கபடமற்ற உள்ளதைக் கொண்டவர்களாக கிராமப்பெண்கள் விளங்கினர் என்பதை உணரலாம். கிராமப் பெண்கள் வல்லவர்கள் மட்டுமல்லர் நல்லவர்களாகவும் வாழ்ந்தனர் என்பது விளங்கும்.

**நாட்டுப்பற்று**

சிலப்பதிகாரத்தில் மாதிரி என்ற ஆயர் குலப்பெண் மன்னவன் கோயிலுக்கு நெய்முறை செய்ய வேண்டி முந்தைய நாளில் உறை ஊற்றி வைத்திருந்த பால் குடத்தை மறுநாள் எடுத்து பார்த்த போது அது தயிராகவில்லை என்றும், எருது கண்ணீர் சொரிந்தது என்றும் வெண்ணையைக் காய்ச்ச முற்பட்ட போது அது உருவகவில்லை. பசுவானது நடுக்கம் காட்டியது என்றும் எதற்கோ அஞ்சி நடுங்கிக் கொண்டது என்றும், அதன் கழுத்திலிருந்து மணி அறுந்து விழுந்ததாகவும் வரவிருப்பதை இத்தகைய தீய நிமித்தங்கள் காட்டுகிறது என்பதை உணர்ந்து ஆயர் குல தெய்வமான கண்ணனை வேண்டி தங்கள் நாட்டையும் குலத்தையும் காப்பாற்றுவதற்காகக் குரவைக் கூத்து ஆடினர் என்ற செய்தி காணப்படுகிறது.

குரவைக் கூத்து என்பது நாட்டுப்புற கலைகளில் ஒன்றாகும். இதனால் பெண்களின் நாட்டுப்பற்றும் தன்னலமற்ற பண்பும் வெளிப்படுத்தப்படுகிறது. போர் புரிந்து ஆண்கள் நாட்டை காப்பாற்றிய போது வீட்டிலிருந்த பெண்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து இறைவழிபாட்டின் மூலம் நாட்டின் நலனுக்காக வேண்டி வழிபட்டனர். பெண்கள் வீட்டிலிருந்தபடியே நெய், தயிர் போன்ற பல பொருள்களைத் தயார் செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் தங்களால் இயன்றவற்றை செய்து வாழ்ந்து வந்திருந்தனர் என்பதை உணரலாம்.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**ஆணாதிக்கப் பழமொழிகள்**

பெண்களுக்கு எதிரானப் பல பழமொழிகளும் நாட்டுப்புற இலக்கியத்தில் காணலாம்.

**பெண்களின் பேச்சிலே தேன் இருக்கிறது**

**உள்ளத்திலே நஞ்சைத் தவிர வேரில்லை (குடும்ப பழமொழிகள்)**

இப்பழமொழி பெண்களின் சிந்தனைகள் நஞ்சினாலானது என பெண்ணின் குணத்தை கேவலமாக சித்தரிக்கிறது. "பெண்புத்தி பின்புத்தி" என்ற பழமொழி பெண் பின்னால் நடக்க கூடியதை முன்னமே ஆராய்ந்து கவனத்துடன் வழி நடத்துவாள் என்ற பொருள் சொல்லப்பட்டாலும் கிராமப்புரங்களில் பெண் யோசிக்கும் தன்மை அற்றவள் என்ற பொருளிலே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பெண் என்பவள் போற்றப்பட வேண்டியவள், மதிக்கத்தகுந்தவள், தாய்மை உள்ளம் கொண்டவள், பெண் துணிவு, பணிவு, பண்பு, அன்பு, பாசம், ஒழுக்கம், காதல், கனிவு, கோபம், வருத்தம், தயக்கம், கூச்சம், அச்சம், தாய்மை போன்ற பண்புகளைத் தன்னகத்தே கொண்டவள் என்று பெருமையாகப் பேசினாலும் கிராமப்புரங்களில் ஆண் ஆதிக்கமே மேலோங்கி நிற்கிறது எனலாம். ஆண் ஆதிக்கம் என்பது ஆதிகாலம் முதலே தோன்றிய ஒன்றாகும். இத்தகைய தன்மை நம் தமிழ் இலக்கியங்களிலும் காணலாம். உலகப்பொதுமறை என்ற திருக்குறளில் கூட வள்ளுவர்.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை (குறள்.55)**

என்ற குறளில் கடவுளை வழிபடாது கணவனை தொழும் பெண் "பெய் என்று சொன்னால் மழை பெய்யும்" என்கிறார். திருவள்ளுவரின் இப்பாடல் ஆண்களின் உயர்வினைப் பறைசாற்றுகிறது. பெண்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளச் சயித்தான் கூட பிரார்த்தனைச் செய்கிறான் என்ற பழமொழி குணத்தில் பெண் பேயை விட கொடூரமான பண்பை உடையவள் எனச் சித்தரிக்கிறது.

**மாமியார் உடைத்தால் மண்குடம்**

**மருமகள் உடைத்தால் பொன்குடம் (பழமொழி)**

இப்பழமொழி மாமியார் என்ற பெண்ணை கொடுமைக்காரியாகச் சித்தரிக்கிறது. மருமகள் செய்யும் சிறு தவறும் பெரிதாக்கி அகம் மகிழ்பவளாக மாமியாரை சித்தரிக்கிறது. இப்பழமொழி மாமியார் தான் தவறே செய்தாலும் 'சரி' என்று ஞாயிக்கரிப்பவளாகவும் தன்னலச் சிந்தனை உடையவளாகவும் சித்தரிக்கப்படுகிறாள். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" இது ஆண் ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் பழமொழி. கணவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும், கல்லாதவனாகவோ, புல்லைப்போன்று உடல் வலிமை இல்லாதவனாக இருந்தாலும் புருஷனாக மதித்து நடத்த வேண்டும். நம் வாழ்வில் அடிக்கடி பயன்படுத்தப்படும் பழமொழியாகும். ஆண்களைப் போற்றும் பழமொழிகளே அதிகம் பயன்படுத்தப்படுவதைக்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

காணலாம். **ஆளான் இல்லாத் மங்கைக்கு அழகு பாழ் (பழமொழி)** கணவனை இழந்த பெண் வாழ்வதே வீண். கணவனை இழந்த பெண்ணுக்குச் சமுதாயத்தில் எந்த மதிப்பும் இல்லை என்பதை உணர்த்தும் பழமொழி. இப்பழமொழி ஆணின் ஆதிக்கத்தையும் பெண்ணின் அவல நிலையையும் வெளிப்படுத்துகிறது. சமூகத்தில் பெண் பிள்ளை அழுவதைக் கண்டு வாய் கட்டி நிற்கின்ற சமூகம் ஓர் ஆண் பிள்ளை அழும் போது நீ ஓர் ஆண்பிள்ளை அல்லவா. அழலாமா என்று ஆணின் துக்கத்தில் பங்கு கொள்கிறது. மேலும், "ஜான் பிள்ளை என்றாலும் ஆண் பிள்ளை அல்லவா" என ஆண்பிள்ளையின் பிறப்பை உயர்த்திப் போற்றுகிறது.

**மூன்று பெண்களுக்கு அப்பால் பிறந்த பையன்**
**பிச்சை யெடுப்பான். மூன்று பையன்களுக்கு**
**அப்பால் பிறந்த பெண் இராஜ்யத்தை ஆள்வான் (குடும்ப பழமொழிகள்)**

போன்ற பழமொழிகள் ஆண் ஆதிக்கத்தை வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை**

பெண்களின் அவல நிலை மாறவேண்டுமானால் அவர்களுக்கு முறையான கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும். சமூக மற்றும் குடும்ப அதிகாரத்தில் பெண்களின் பங்கை ஊக்குவித்தல் வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாட்டை எதிர்த்து போராடுதல் வேண்டும் மேற்கூறிய தீர்வுகளைச் செயல்படுத்துவதன் மூலம் கிராமப்புற பெண்களின் நிலையை உயர்த்தலாம். பெண்களின் பாதுகப்பிற்காகச் சொத்துரிமையும் வேலைவாய்ப்பும் வழங்கப்படுமேயானால் குடும்பத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறையும் எனத் திடமாகக் கூறலாம்.

**குறிப்புகள்**

[1] சண்முகசுந்தரம், சு. *நாட்டுப்புற இலக்கிய வரலாறு*. மணிவாசகர் பதிப்பகம், 1980.
[2] [சத்தியசீலன், சி. *நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள்*. பயோனியர் புக் சர்வீஸ், 47, நல்லதம்பித் தெரு, திருவல்லிக் கேணி.
[3] ராமசாமி, ப. *குடும்ப பழமொழிகள்*. நோஷன் பிரஸ், சென்னை, 2022.
[4] வரதராஜன், *தமிழக நாட்டுப்பாடல்கள்*. வானதி பதிப்பகம், சென்னை-17, 1978.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.